60

11

230

NEP/CO/GEN/02

04.10.2005

சுற்றறிக்கை இல : 03/2005

சகல கூட்டுறவு அபிவிருத்தி
உதவி ஆணையாளர்களுக்கும்,

## அரசின் துரித வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் நியமனம் பெற்ற பட்டதாரிகள்

அரசின் துரித வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பட்டதாரிகளுக்கு அமைச்சுக்கள் பல்வேறு திணைக்களங்களில் நியமனம் வழங்கப்பட்டு இவர்கள் அரச சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு வருகின்றனர். அவ்வாறே வடகிழக்கு மாகாணத்திலும் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டு வருகின்றன. கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திலும் பட்டதாரிகளுக்கு இவ்வாறே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

1. நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் (Programme Assistant) என பதவி நிர்ணயம் செய்யப்பட்டு அவர்கள் நிதி, பொதுமுகாமைத்துவம், புள்ளிவிபரம், தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், மனிதவள அபிவிருத்தி என்ற விடயங்களின் கடமைப் பொறுப்புக்களில் ஈடுபடுத்தும்படி மாகாண பொது நிர்வாக அமைச்சு செயலாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இப்பட்டதாரிகளுக்கான நியமனக் கடிதங்களும் கடமைப் பொறுப்பினை ஏற்கும் அதிகாரக் கடிதங்களும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

2. வடக்கு கிழக்கு மாகாணத்தினை பொறுத்தவரை போர்ச்சூழல், இயற்கை அனர்த்தப் பேரழிவு என்பன இப்பகுதியின் பொருளாதார, சமூக சூழலில் பாரதூரமான விளைவினையும், பின்னடைவையும் ஏற்படுத்தியுள்ளமை தாங்கள் அறிந்ததே. இத்தகைய புறச்சூழலில் இருந்து ஒரு புதிய சமூக பொருளாதார இலக்குகளை நோக்கி பல செயற்பாடுகளை இப்பட்டதாரிகள் மூலம் நகர்த்துவது என்பது எமது நிர்வாக முகாமைத்துவத்தில் மாற்றங்களை ஏற்படுத்தல், பொதுச்சேவை நிர்வாகத்தினை வினைத்திறமைமிக்க (Efficient Public Administration) ஒன்றாக மாற்றுதல் மூலமே சாத்தியமாகும் என்பது ஈண்டு நோக்கத்தக்கது.

3. மேற்காண் இலக்குகளின் மையகோல் (Focal Point) ''கூட்டுறவு விழுமியங்கள் ஊடாக கிராமிய பொருளாதார அபிவிருத்தியினை ஏற்படுத்துவதும், பல்வேறுபட்ட மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதுமாகும்.'' ஆதலால் தங்கள் பிரிவுகளில் தற்போது இணைக்கப்பட்டிருக்கும் பட்டதாரிகளின் சேவையினை தகுந்த முறையில் பெறுவதற்கு பின்வரும் அணுகுமுறைகளை பின்பற்றுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

- நியமனம் செய்யப்பட்ட பட்டதாரிகள் சேவையினை முழுமையாக அங்கீகரித்தல்.

- இணைக்கப்பட்ட பட்டதாரிகள் உதவி ஆணையாளர்களின் நேரடிக் கண்காணிப்பிலும் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் மட்டுமே கடமைகளை மேற்கொள்வதை உறுதிப்படுத்தல்.

- திணைக்கள (Statute Function) சட்டரீதியான தொழிற்பாடுகள் அதாவது கணக்காய்வு, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் கடமை, நடுத்தீர்ப்பு, குலைப்பு நடவடிக்கை, விசாரணை போன்ற கடமைகளில் அவர்களை ஈடுபடுத்துவதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளல்.

- தங்களுக்கு வழங்கப்பட்ட கடமைப்பட்டியலின் அடிப்படையில் கடமைப் பொறுப்புக்களை வழங்கி அவர்களிடமிருந்து உயர் சேவையினைப் பெறுதல்.

- அலுவலக, சங்க, அரச, அரசசார்பற்ற தாபனங்களின் மட்டத்தில் பட்டதாரிகள் மூலம் தொடர்புகளை (Link) ஏற்படுத்தல்.

- நுண்கடன் (Micro Credit) வேலைத்திட்டங்களை கிராமந்தோறும் ஆரம்பிப்பதற்கு அவர்களின் பங்களிப்பு வாய்ப்பினை அதிகரித்தல்.

- உயர் சேவையினைப் பெறுவதற்கும், அவர்களுடைய ஆற்றல், அறிவினை மேம்படுத்தவும், பொருத்தமான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்தல். அதற்கு ஏதுவாக பயிற்சி முறையை (Modul) வகுக்க ஒத்துழைத்தல்.

- திணைக்கள அலுவலர் – பட்டதாரிகள் ஆகியோர் மத்தியில் நல்லுறவை வளர்த்தல். அதற்கு வகை கூறுதல் (Accountability) உதவி ஆணையாளரைச் சார்ந்ததாகும்.

- பட்டதாரிகளின் சேவையினை பெறுவதற்கு வடகிழக்கு பிரதம செயலாளர், மாகா பொது நிர்வாக அமைச்சு செயலாளர் ஆகியோரால் அவ்வவ்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்கள் பட்டதாரிகளை சென்றடையவும், செயற்படவும் வழிவகை செய்தல்.

**ஆ.சுப்பிரமணியசர்மா,**
பதில் கூ.அ.ஆணையாளரும்,
கூ.ச.பதிவாளரும்.(வகிமா)

-கிம.